**வ/ப எல்ஆர்டிசீ சேவைகள் (தனியார்) கம்பனி - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப எல்ஆர்டீசீ சேவைகள் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தனைத் தவிர்த்து, கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிரயாயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிரயாயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்த்தொழில் ஐயப்பாட்டினையும் பேனுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின் ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி, கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தவதன் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. போதியளவு நிச்சியமற்ற நிலைமைகள் உள்ளதாக நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதுக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள, புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கப்பூர்வமாக செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய போதுமான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கப்பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தவா என்பதும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடலுக்கான நியமங்களுடன் இணங்காமைகள்

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான நிதி அறிக்கையிடல் நியமத்தின் 17.15 (ஆ) பிரிவு பிரகாரம் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி மீள்மதிப்பீட்டு பெறுமதிக்கு கணக்கிட்டு கணக்கீடு செய்ய வேண்டிய போதும் கம்பனிக்கு சொந்தமாகவுள்ள ரூபா 9.01 மில்லியன்கள் பெறுமானத் தேய்விட்டு முடிவுறுத்தப்பட்டுள்ள போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் 188 நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு விடயத்தை ஏற்றுக் கொள்வதுடன், எதிர்காலத்தில் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டை அனைத்த நிலையான சொத்து வகுப்புக்களும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டுக் கொள்கைகளுக் கு இணங்க சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக கம்பனியால் சேவை பெறுனருடன் உடன்பட்டிருந்த உடன்படிக்கைகளின் 24 இலக்கம் பிரகாரம் ஒவ்வொறு தினத்திலும் சேவையில் ஈடுவடுத்த வேண்டிய பாதுப்பு முன்னோடிகளின் எண்ணிக்கையை சேவியில் ஈடுபடுத்தாதனை கவனத்தில் கொண்டு பட்டியல்களை தயாரிக்காது மனித நாட் சம்பளம் குறைத்தல், மற்றும் ஏனைய காரணங்களின் மீது தண்டப்பணம் அறவிடல் காரணமாக சேவை வழங்கும் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட மீளாய்வாண்டிற்காக சமர்பித்த பட்டியல்களிலிருந்து ரூபா 32.94 மில்லியன் குறைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதனை கம்பனியின் வருமானத்திலிருந்து விற்பனை கிரயத்தின் ஒரு பகுதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்து காரணத்தால் மீளாய்வாண்டின் பாதுகாப்பு சேவைகள் வருமானம் அப்பெறுமதியால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது. | பட்டியல் சமர்பித்த பின்னர் வேவைபெறும் நிறுவனத்தின் மூலம் வெளிப்படுத்திக் கொள்ளும் தகவல்களின் மீது ஈடுபடுத்தாத ஊழியர் மணித்தியாலம் 24 யை விஞ்சி பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவது தொடர்பான போன்ற விடயங்களின் மீது இப் பட்டியல் மீதான குறைப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீளாய்வாண்டினுள் பட்டியல்களிலிருந்து ரூபா 32.94 மில்லியன் மாத்திரமான குறைப்பனவு விற்பனை கிரயமொன்றாக காட்டும் செயன்முறை 2016 இலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. | வருமானங்களை இனங்காண சரியான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் 1 மாதம் முதல் 12 மாதங்கள் வரையான காலமாக சேவைக்கு அறிக்கையிடாத 1009 பாதுகாப்பு உத்தியோகத்தர்களிற்காக தேவைான செயன்முறைகளை உரிய காலத்தினுள் எடுக்காது மீளாய்வாண்டிற்காக பணிக்கொடையாக ரூபா 2.56 மில்லியன் ஒதுக்கிய காரணத்தால் மீளாய்வாண்டின் வருமானம் அப் பெறுமானத்தால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | சேவையை விட்டுச் செல்லலை உரிய முறையில் குறித்த ஆவணங்களினால் உறுதி செய்த பின்னர் மாத்திரம், அவரிற்கு பணிக்கொடை ஒதுக்குவதற்கான பதிவேட்டிலிருந்து குறித்த ஊழியர்களை அகற்றும் இயலுமை காணப்படுவதால் அதன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சேவை உடன்படிக்கை பிரகாரம் சேவையை விட்டுச் செல்லலை சரியாக இனங்காணவும் அதன் பிரகாரம் நாளாதுவரையாக கணக்கீடு செய்யவும் நடவக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021.12.31 திகதியன்று கம்பனியினால் செலுத்தாத VAT வரித் தொகை ரூபா 266.94 மில்லியன் ஆனதுடன் அவ் வரித்தொகையை 2022.11.05 திகதி வரையும் செலுத்தி இருக்கவில்லை. அதன் பிரகாரம் 2021.12.31 திகதியன்று ரூபா 136.8 ஆன தண்டப்பணம் செலுத்த வேண்டிய அபாயமொன்று நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. | 2021.12.31 திகதியன்று நிலுவையாக உள்ள VAT வரித் தொகையான ரூபா 266.94 மில்லியன் அளவு தொடர்பாக கணக்கிடப்பட்ட தண்டப்பணத்தை ஏற்றுக் கொண்ட போதும் நிறுவனம் தொடர்ச்சியாக வரி செலுத்துனர் என உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் உறுதிப்பாடொன்றை | உள்நாட்டு இறைவரி திணைக்ள சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் உள்நாட்டு இறைவரி திணைக்ளத்துடன் எழுத்துமூல இணக்கப்பாட்டை |

| | | | |
|---|---|---|---|
| | | 2022.11.30 வரை வழங்கியுள்ளமை மற்றும் LRDC நிறுவனம் அரச கம்பனியொன்றாக இருத்தல் மற்றும அதன் மீது சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பாக மற்றும் தண்டப்பணம் தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் இலகுவான கொள்கையொன்றை பின்பற்றுவதன் மீது அத் தண்டப்பணத்தின் தாக்கம் நேரடியாக நிறுவனத்திற்கு தொடர்புபடுத்திக் கொள்ள முடியாது. | ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | கம்பனியினால் மீளாய்வாண்டு இறுதியிலான இருப்பை மொத்த சராசரி கிரய (WAC) முறையின் கீழ் கணக்கிட்டு இருந்தது. முதல் உள்ளே முதல் விநியோக முறையில் (FIFO) கணக்கிட்டிருந்த ரூபா 3.94 மில்லியனான ஆண்டின் ஆரம்ப இருப்பு தொடர்பாக எவ்வித செம்மையாக்கலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டில் இருப்பு கணக்கிடும் கொள்கையை FIFO இலிருந்து WAC முறைக்கு மாற்றப்பட்டது. 2021 ஆரம்ப மீதி, கடந்த ஆண்டுடன் ஒப்பிடப்படுவதால், ஆரம்ப மீதிகளிற்காக இணக்கம் செய்யப்படவில்லை. | தாய் கம்பனியுடன் ஒன்றுபட்ட கணக்குக் கொள்கையொன்றை பின்பற்ற வேண்டும். |
| (உ) | மாதிரி பரிசோதனையின் பிரகாரம் கம்பனியினால் மார்ச் மாதத்தில் 786 நிறுவனங்களிற்காக பாதுகாப்பு சேவையை 5 வகைகளின் கீழ் வழங்கிய சேவைகளுக்காக அலுவலர்களுக்கு சம்பளம் தயாரிப்பதனை அடிப்படையாகக் கொண்டிருந்த சேவை முறை மாற்றுத் தடவைகளின் எண்ணிக்கை 120,523 ஆன போதும் அச் சேவைகளை 5 வகைகளின் கீழ் மார்ச் மாதத்திற்காக குறித்த நிறுவனங்களிற்கு உடன்படிக்கை பிரகாரம் பட்டியலிடப்பட்டிருந்த சேவை முறை மாற்றுத் தடவைகளின் எண்ணிக்கை 118,795 ஆனது. அதன் காரணமாக சேவைபெறும் நிறுவனத்திற்கு குறைவாக பட்டடியல் இடப்பட்ட சேவை முறை மாற்றுத் தடவைகள் 2,950 ஆனதுடன் அதற்காக குறைவாக கணக்கிடப்பட்ட வருமானம் மார்ச் மாதத்திற்கு மாத்திரம் ரூபா 3.36 மில்லியனாகும். | 2021 மார்ச் மாதம் சம்பளம் தயாரிக்க அடிப்படையாகக் கொண்ட சேவை முறை மாற்றுத் தடவைகளின் எண்ணிக்கை 120,523 ஆனது. பட்டியல் தயாரிப்பதற்காக பயன்படுத்திய சேவை முறை மாற்றுத் தடவைகளின் எண்ணிக்கை 118,795 ஆனதுடன் சம்பளத்திற்கான சேவை தடவைகள் அறிக்கை மற்றும் பட்டியல் தயாரிப்பதற்கான சேவை முறை மாற்று அறிக்கை, ஒப்பீட்டினூடாக, தொடர்ந்தும் முரன்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | உண்மையாக சேவைஙயில் ஈடுபடுத்திய சேவை முறை மாற்று நாட்களிற்கு உரியதாக பட்டியல் தயாரிக்க வேண்டும். |

## 1.6 பெற வெண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி செய்யும் (தாய்) கம்பனிக்கு உழியர்களை வழங்க (Man Power) உடன்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் கம்பனிக்கு அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 20.72 மில்லியன் ஆனதுடன் அவற்றில் ரூபா 17.61 மில்லியன் ஓராண்டை விஞ்சிய காலத்தில் இருந்தும், ரூபா 1.73 மில்லியன் 3 மாதங்களிற்கும் 12 இற்குமிடையிலான காலத்தில் இருந்தும் அறவிட வேண்டியதாக நிலவிய போதும் குறித்த மீதிகளை அறவிட போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | இது வரை கால தாமதமான கடன்படுனர் மீதிகளில் இருந்து கனிசமான தொகையை அறவிட இயலாதிருந்தது. எனினும் எதிர்காலத்தில் தாய் கம்பனியின் நிதி நிலைமை சீரான பின்னர் அதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் கம்பனியின் வியாபார கடன்படுனர் மீதி ரூபா 892.86 மில்லியனானதுடன் அவற்றில் ஆண்டு 1 இற்கும் 2 இற்குமிடையிலான காலமாக நிலுவையாக காணப்படும் மீதி ரூபா 46.95 மில்லியனும், அண்டு 2 இற்கும் 5 இற்குமிடையிலான மீதி ரூபா 64.41 மில்லியனும், 5 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 17.88 மில்லியனும் ஆனபோதும் குறித்த மீதிகளை அறவிட போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | கடன்படுனர் மீதி தொடர்பாக சுகாதார அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் சபையை முன்கூட்டி அறிவூட்டப்பட்டன. படிப்படியாக அத் தொகையை அறவிட முன்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை கடன்படுனர் மீதிகளை விரைவில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் கம்பனியினால் மனித வழு வழங்கியதற்காக அறவிட வேண்டியதாக இருந்த தொகை ரூபா 164.57 மில்லியனானதுடன் அது கடந்த ஆண்டைவிட ரூபா 19.20 மில்லியன் அதிகமானது என அவதானிக்கப்பட்டது. | மனித வழு வழங்கியதற்காக அறவிட வேண்டிய மீதிகளிலிருந்து ஓராண்டிற்கு மற்றும் அதற்கு அதிகமான கடன்படுனர் மீதிகளின் அதிகமான தொகை தாய் கம்பனியின் பெயரில் காணப்படுவதுடன், எதிர்காலத்தில் அந் நிலைமையை திருப்திகரமாக தீரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | நிலுவை கடன்படுனர் மீதிகளை விரைவில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் கம்பனியின் தொழிநுட்ப சேவை வழங்கல் (Technologica Solution), பாதுகாப்பு உபகரணங்களை வழங்கல் (Security Equipment) மற்றும் நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் (Events & Tournaments) ஆகிய பிரிவுகளின் கடன்படுனர்களிடம் இருந்து அறவிட வேண்டிய மீதி ரூபா 18.74 மில்லயன் ஆனதுடன் அவற்றில் ரூபா 4.64 மில்லியன் 2–3 ஆண்களிற்கு இடையிலான காலமாகவும், கெரவலபிடிய குப்பை கொட்டிலில் கம்பனியினால் மேற்கொண்ட CCTV தொகுதியை பொருத்தியதற்காக தொடர்ந்தும் கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிட கம்பனிக்கு இயலாதிருந்த ரூபா 1.67 மில்லியன் 4 ஆண்டுகளிற்கு அதிக காலமாகவும் அறவிட வேண்டியதாக காணப்பட்டன. | இது தொடர்பாகவுள்ள பகுப்பாய்வை ஏற்பதுடன், அத் தொகையை அறவிடுவது தொடர்பாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. CCTV தொகுதிக்காக அறவிட வேண்டிய ரூபா 1.67 மில்லியன் பெறுமதி தொடர்பாக உயர் முகாமைத்துவத்துடன் கூடிய குழுவின் பரிந்துரை கிடைத்த பின்னர் இது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடன்படுனர் மீதிகளை விரைவில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் கடைக்க வேண்டிய பண்டிகை முற்பண மீதி ரூபா 10.24 மில்லியனானதுடன் அவற்றில் ஓராண்டை விஞ்சிய காலமாக நிலவிவரும் ரூபா 5.72 மில்லியன் மீதியை அறவிட கம்பனியினால் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓராண்டை விஞ்சிய ரூபா 5.72 மில்லியனின் பெறும் பகுதி முறையற்ற விதமாக சேவையை விட்டுச் சென்ற நபர்களுக்கு உரியதாக அறிவிட வேண்டிய முற்பணமாகும். அவற்றிலிருந்து சிறிய அளவை சேவையை விட்டுச் செல்லலை முறையாக ஒப்படைப்பதுடன் தீர்க்கப்படும். | கிடைக்க வேண்டிய முற்பணத்தை விரைவில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | ரூபா 892.86 மில்லியனான மொத்த கடன்படுனர் மீதிகளிற்குரியதாக 131 கடிதங்கள் மூலம் மீதி உறுதிப்பாடுகளை கோரியுள்ள போதும், அவற்றில் கணக்காய்விற்கு 21 கடிதங்களிற்கு உரியதான ரூபா 96.67 மில்லியன் தொடர்பான மீதிகள் மாத்திரமே உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றில் 13 உறுதிப்படுத்தல் கடிதங்கள் மூலம், கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 105.50 மில்லியனில் ரூபா 38.19 மில்லியன் அதாவது 36 சதவீதத்தால் கம்பனியின் தரவுகளுடன் உடன்பட்டிருக்கவில்லை. உறுதிப்படுத்தல்களை சமர்பிக்காத கடன்படுனர் மீதி ரூபா 796,19 மில்லியனானது. | கடன்படுனர் மீதி உறுதிப்பாட்டுக் கடிதம் (Debtor's Confirmation) கணக்காய்வு விடயத்திற்காக மொத்த கடன்படுனர் மீதிகளையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்படுவதுடன், அக் கடிதங்களிற்காக பதில் வழங்குதல் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், உறுதிப்பாட்டுக் கடிதம் | கடன்படுனர் மீதி உறுதிப்பாடுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் உடன்படாத பெறுமானங்களுக்கு முக்கிய காரணமாவது நிறுவனங்களிற்கு இடையில் காணப்படும் வருமானத்தை இனங்காணும் முறைமையின் வித்தியாசம் மற்றும் வழியின் காசாகும். | |
| (எ) | வாடகை வீடுகளிலிருந்து விலகியுள்ள மற்றும் குத்தகை உடன்படிக்கை காலம் முடிவடைந்து ஆண்டு 01 முதல் 04 வரையான காலம் கடந்துள்ள போதும் அவ் வாடகையை வீட்டு உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய 06 வைப்புக்களிற்குரிய ரூபா 533,000 ஆன தொகையை 2022 ஆகஸ்ட் வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாடகை வீட்டு உரிமையாளர்களிடம் இருந்து மீண்டும் அறவிட வேண்டிய வைப்பு தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளதுடன் அதன் பிரகாரம், முன்நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்குமாறு குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வைப்புக்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய கணக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் அங்கீகாரத்தின் மீது கம்பனியின் வெட் வரிப் பொறுப்பு கணிப்பிடல் பண அடிப்படையில் மேற்கொண்டிருந்த போதும், அதன் மீது மீளாய்வாண்டு இறுதியில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தி இருக்காத வெட் வரி பெறுமதி ரூபா 379.41 மில்லியனானது. | கணக்கறிக்கை பிரகாரம் செலுத்த வேண்டிய VAT தொகை மீதி ரூபா 379.41 மில்லியனான போதும், VAT ஆக 2021.12.31 திகதியன்று செலுத்த வேண்டிய மீதி ரூபா 286.29 மில்லியன் அளவாகும். அதற்கு காரணமாவது, நிறுவன கணக்கு அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட போதும், VAT வரித் தொகை செலுத்துவது பண அடிப்படையில் ஆவதாகும். | செலுத்த வேண்டிய யாப்பு ரீதியான கொடுப்பனவுகளை விரைவில் தீர்க்க வேண்டும். |

## 1.7 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து அறவிட வேண்டியதாக ரூபா 167.07 மில்லியன் கம்பனி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதியாக ரூபா 158.39 மில்லியன் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டு மீதிகளிற்கு இடையில் ரூபா 8.68 மில்லியன் வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | LRDC நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 167.07 மில்லியன் ஆனதுடன் SLLDC நிறுவனத்தின் புத்தகங்களில் அது செலுத்த வேண்டிய மீதியாக குறிப்பிடப்படுவது ரூபா 158.38 மில்லியன் ஆவதுடன், அவற்றிற்கு இடையிலான வித்தியாசம் ரூபா 8.68 மில்லியனாகும். | மீதிகளிற்கு இடையிலான வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு உடன்பாட்டிற்கு வர வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கம்பனியின் நிதக்கூற்றுக்கள் பிரகாரம் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டியதாக ரூபா 30.93 மில்லியன் காட்டப்பட்டிருந்த போதும், காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 29.57 மில்லியனாக காட்டியதில் அவற்றிற்கு இடையில் ரூபா 1.36 மில்லியனான வித்தியாசம் அவதானிக்கப்பட்ட போதும் அவ் வித்தியாசத்திற்கான காரணத்தை கணக்காய்விற்கு சமர்பிக்கவில்லை. | இவ் வித்தியாசத்திற்கு காரணமாவது நிறுவனத்தினால் காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கம்பனிக்கு வழங்கிய ரூபா 1.36 மில்லியன் பெறுமதியான பட்டியல்கள் உருதிப்படுத்தப்படாததால் அந் நிறுவன புத்தகங்களில் அப் பட்டியல் உள்ளடக்கப்படாமையாகும் | முறையாக குறித்த திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தொடர்புடைய தரப்பினருடன் கம்பனியால் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களுக்குரிய கணக்குகள் கம்பனியால் வேறாக பேணாது, கடன்படுனர் மற்றும் கடன்கொடுனர் கணக்குகளுடன் பொதுவாக பேணிச் செல்கின்ற காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | தொடர்புடைய தரப்பினரிற்கான கிடைக்க வேண்டிய கணக்கு மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு நிறுவனத்திற்கு வெவ்வேறாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் Trade Receivable இற்கு மாத்திரம் இந்த பேரேட்டு கணக்கை சேவை பெறுனராக(Client) இனங்காணப்பட்டுள்ளது. | தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களிற்காக வெவ்வேறாக இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 ஜுன் 02 திகதிய அரச முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ 12 | | | |
| (i) | 9.14.2 பந்தி | நிறுவனத்தினால் தயாரித்து பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயன்முறை கைநூலிற்காக சுற்றறிக்கை பிரகாரம் திறைசேரி செயலாளரின் உடன்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு பெற்றுக் கொள்ளாது உள்ளக செயன்முறை கைநூலின் பிரகாரம் ஊக்குவிப்பு படிகளாக மீளாய்வாண்டினுள் ரூபா 11.50 மில்லியன் செலுத்த்ப்பட்டிருந்தது. | எதிர்வரும் கொடுப்பனவுகளின் போது உரிய அங்கீகாரங்களின் கீழ் கொடுப்பனவு செய்யுமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கை ஆலோசனைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 9.2 பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் பதவிகளுக்கு உரி சம்பள கட்டமைப்பை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அங்கீகரித்துக் கொண்டிருக்காததுடன் அங்கீகார ஆளணியை பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்திருக்க்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை 02/2016 பிரகாரம் சம்பளம் மற்றும் பதவிகளின் திருத்தத்தை பணிப்பாளர் சபையினால் 2020.01.01 திகதி முதல் அமுலாகும் வகையில் திருத்தப்பட்டுள்ளது. குறித்த சுற்றறிக்கை பிரகாரம் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் அதற்காக முகாமைத்துவ சேவைகன் திணைக்களத்தின் அஙகீகாரத்தை பெற்றிருக்கவில்லை. இது தொடர்பாக கலந்துரையாடி முன்நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஆட்சேர்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்திற்காக குறித்த அமைச்சின் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 9.3.1 பந்தி மற்றும் 2016 செப்டம்பர் 22 திகதிய இலக்கம் 30 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமொன்றை தயாரித்து அதனை குறித்த அமைச்சின் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற வேண்டிய போதும் அவ்வாறு பெறப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) | 2011 இன் 10 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரி (திருத்தம்) சட்டத்தின் 4 ஆம் பிரிவு | தேசத்தை கட்டியெழுப்பும் வரி அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய போதும், 2018 மற்றும் 2019 ஆண்டுகளிற்கான ரூபா 9.21 மில்லியனான தேசத்தை கட்டியெழுப்பும் வரியை மீளாய்வாண்டு இறுதி வரையும் அனுப்ப கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 9.21 மில்லியனான கடந்த ஆண்டுகளிற்கான (2018 மற்றும் 2019) உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய பணம் தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளதுடன் தவனை அடிப்படையில் ஏனும் செலுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2006 இன் 08 இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட (திருத்த) வரி சட்டத்தின் 11 ஆம் பிரிவு | கம்பனியினால் ஒவ்வொரு மாதத்திற்கும் உரியதாக செலுத்த வேண்டிய வெட் வரியை அடுத்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் 2019 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய சேவை பெறுனர்களிடம் இருந்து கிடைத்த வெட் வரி தொகையிலிருந்து ரூபா 266.94 மில்லியன் 2022 ஜுலை அளவில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. | 2019 மற்றும் 2021 வெட் வரித் தொகை பகுதி ஒன்றை அனுப்ப முடியாது போனது தொடர்பான அவதானிப்பை ஏற்றுக் கொள்வதுடன், 2021 ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 48 மில்லியன் அளவான தொகையை 2022 ஆண்டில் அனுப்பவும், நிலுவை பெறுமதியை எதிர்காலத்தில் தீர்க்கவும், திட்டமிடப்படும். | வரி சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 54.98 மில்லியனான வரிக்கு முன் தேறிய இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 39.98 மில்லியனானது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 15.00 மில்லியன் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

இந்த வளர்ச்சிக்கு நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள் கடந்த ஆண்டிங்கு ஒப்பாக ரூபா 35.90 மில்லியனினால் குறைந்தமை காரணமாக அமைந்திருந்தது. அக் குறைவடைதலிற்கு முக்கியமாக கடந்த ஆண்டில் ரூபா 47.89 மில்லியன் ஐயக்கடன் மிகை ஒதுக்கீட்டை வருமானமாக இணங்கானாது நிர்வாக செலவுகளிலிருந்து குறைத்து காட்டியமை முக்கிய காரணமாக இருந்தது.

## 2.2. விகிதப் பகுப்பாய்வு

சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியில் சில முக்கிய விகிதங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு பின்வருமாறு காட்டப்படுகின்றன.

| | 2021 | 2020 |
|---|---|---|
| மொத்த இலாபம் எல்லை (சதவீதம்) | 6.97 | 8.05 |
| தேறிய இலாபம் எல்லை (சதவீதம்) | 2.59 | 2.1 |
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 1.64 | 1.54 |
| கடன்படுனர் புரள்வு விகிதம் | 2.49 | 2.61 |
| கடன் சேர்க்கும் காலம் (நாட்கள்) | 146 | 140 |

(அ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் மொத்த இலாபம் ரூபா 10.43 மில்லியனினால் குறைந்திருந்ததுடன் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக கம்பனியின் வருமானம் ரூபா 170.28 மில்லியனினால் அதிகரித்திருந்த போதும் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்களுக்கு மற்றும் மனித வலு வழங்கும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மேலதி நேர கொடுப்பனவு ரூபா 119.98 மில்லியனினால் அதிகரித்தமை இதற்கு பிரதானமான காரணமாக இருந்தது. அவ்வாறே சேவை பெறுனர் நிறுவனத்தினால், கம்பனியினால் முன்வைக்கப்பட்ட பட்டியல்களிலிருந்து குறைக்கப்பட்ட பெறுமதி கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 11.47 மில்லியனினால் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டில் 2.61 ஆன கடன்படுனர் விற்பனை விகிதம் மற்றும் 140 நாட்களான கடன் சேகரிக்கும் காலம் மீளாய்வாண்டில் முறையே 2.49 மற்றும் 146 ஆனமை மற்றும் கடன் சேகரிக்கும் காலம் 6 நாட்கள் வரை அதிகரித்தமை காரணமாக கடந்த ஆண்டிற்கு ஒப்பாக கம்பனியின் கடன் முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக திருப்திகரமான நிலைமை ஒன்று அவதானிக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி தனது பிரதான அலுவலக கட்டிடத்தை நிர்மாணிக்க அத்திடியவில் அமைந்துள்ள 120 பர்சஸ் காணியில் 2018 ஆண்டில் பிரதான தாய் கம்பனியிடம் 30 அண்டுகள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் ரூபா 16.52 | கட்டிடம் தொடர்பான ஆரம்ப திட்டத்தை தயாரித்துள்ளதுடன், அத் திட்டம் தொடர்பாக அங்கீகாரம் இது வரை | சுவீகரித்துக் கொண்ட சொத்துக்களிலிருந்து உரிய பயன்பாட்டை பெற்றுக் கொள்வது கம்பனியின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனிற்கு பெற்றிருந்த போதும், நிர்மாணப் பணிகள் 2022 ஜுலை அளவிலும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | பெறப்படவில்லை. நாட்டில் நிலவும சீரற்ற பொருளாதார நிலைமை இதற்கு பிரதானமாக காரணமாகவுள்ளது. | |
| (ஆ) | கம்பனி 2017 ஆண்டில் தயாரித்த இணைந்த மூலஉபாய வழிகளில் உள்ளடங்கிய மூலஉபாய செயன்முறையில் குறிப்பிடப்பட்டுள்ள 35 செயற்பாடுகளில் 11 செயற்பாடுகளை மேற்கொள்ள மீளாய்வாண்டு இறுதி வரையும் கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்கொள்ள முடியாது போன செயற்பாடுகள் முக்கிய இலக்காகக் கொண்டிருந்தது புதிய வியாபார மூலஉபாய வழிகளிற்கு மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளாகும். 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் நாட்டில் நிலவிய தொற்று நிலைமை காரணமாக பதிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடம் பிரச்சினைக்குரிய நிலைமை இந்த நிறுவனத்திற்கும் தாக்கம் செலுத்தியுள்ளது. | கூட்டிணைந்த மூல உபாயங்களில் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வது கம்பனியின் பொறுப்பாகும். |
| (இ) | ஊழியர் ஒருவரின் சம்பளத்திளிலிருந்து செலுத்தும் சம்பள முற்பணம் உடன்பட்டவாறு குறித்த மாதங்களில் சம்பளத்திளிலிருந்து அறவிடப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதிவரையும் அவ்வாறு அறவிடப்படாத சம்பள முற்பண மீதி ரூபா 2.39 மில்லியன் ஆனது. அவற்றின் ரூபா 2.35 மில்லியனான மீதியொன்று ஓராண்டுக்கும் அதிகமான காலத்திலிருந்து அறவிடப்படாது நிலவுவதாக அவதானிக்கப்பட்டது. | 2021 ஆண்டினுள் ஊழியர் முற்பணமாக செலுத்தப்பட்ட முற்பணத்தை இனங்கண்டு அவற்றை திர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சம்பள முற்பணத்தை உடன்பட்டவாறு குறித்த மாதங்களில் சம்பளத்திலிருந்து தவணைகளாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 6 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 462,400 ஆன நிமித்த கட்டுநிதியை வேலைகள் பூர்த்தி பூர்த்தியாகி 14 நாட்கள் முதல் 263 நாட்கள் வரையான கால எல்லைகள் கடந்திருந்த போதும் முற்பண மீதியொன்று மீளாய்வாண்டு இறுதிவரையும் தீர்ப்பதற்கு இயலாதிருந்தது. அவ்வாறே 51 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களிற்கு வழங்கியிருந்த ரூபா 7,000 முதல் ரூபா 758,000 வீச்சளவிலான கூட்டுத்தொகை ரூபா 3,278,250 ஆன முற்பணத்தை | செலவினத்திற்கான முற்பணம் தொடர்பாக இப் பகுப்பாய்வு சரியானதுடன், இத் தாமத நிலைமையை குறைத்துக் கொண்டு கவனிக்கத்தக்க முன்னேற்றத்துடன் இந் நடவடிக்கையை மேற்கொள்ள குறித்த நடவடிக்கைகளை திட்டமிட்டுள்ளதாக அறவிக்கிறேன். | விஷேட முற்பணத்தை குறித்த வேலைகள் முடிவடைந்த உடனே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்க்க குறித்த வேலைகள் முடிவடைந்து 32 நாட்கள் முதல் 307 நாட்கள் வரையான காலம் நடந்திருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியிலான ரூபா 61,530,396 ஆன நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு இருக்காததுடன் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடங்கிய அப் பண்டங்கள் தொடர்பாக இறுதியாக பண்டகக் கணிப்பீட்டை நடாத்தி பௌதீக ரீதியான சரிபார்த்தல் 2018 ஆண்டிளேயே பரிசோதிக்கப்பட்டிருந்தது. | இவ் அவதானித்த குறைபாட்டை ஏற்றுக் கொள்வதுடன் இவ்வாண்டு ஒக்டோபர் மூன்றாம் வாரத்தினுள் இந் நடைமுறையல்லாத சொத்து கணிப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருடாந்தம் பண்டக கணிப்பீட்டை நடாத்தி சொத்துக்களின் பௌதீக நிலையான தன்மையை உறுதி செய்ய வேண்டும் |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார பல்வகைப்படுத்தலின் கீழ் 2017 ஆண்டில் வெளி நாடுகளின் பாதுகாப்பு பிரிவுகளில் கடமைக்காக ஊழியர்களை வழங்கும் வியாபாரமொன்றை கம்பனியினால் ஆரம்பித்து அதற்குரிய அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள மற்றும் ஏனைய செலவுகளாக ரூபா 234,634 செலவிட்டிருந்த போதும் 2020 ஜுலை அளவில் அவ் அனுமதிப்பத்திரம் காலாவதியாகி இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்காக அவ் வியாபாரத்தின் மூலம் ரூபா 52,475 ஆன வருமானமொன்று சேகரிக்கப்பட்டு இருந்தது. அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்து இவ் வியாபாரத்தை முன்கொண்டு செல்வதா என மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்மானித்திருக்கவில்லை. | இவ் அவதானத்தை ஏற்றுக் கொள்வதுடன், தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமையை கவனத்திற் கொண்டு இவ் வியாபார நடவடிக்கையை எதிர் காலத்தில் மேற்கொள்வதா என உயர் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும். | வியாபாரத்தை எதிர் காலத்தில் நடாத்திச் செல்லும் சாத்தியப்பாடு தொடர்பாக முறையான ஆய்வொன்றை மேற்கொண்டு தீர்மானிக்க வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் கடல் மணல் விற்பனை தொடர்பாக ஆரம்பித்த வங்கி நடைமுறைக் கணக்கிலான ரூபா 305,900 ஆன மீதி 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளாது செயலற்றதாக நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. | கடல் மணல் விற்பனை கருத்திட்டத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட ரூபா 305,900 ஆன மீதியொன்று காணப்படும் நடைமுறை கணக்கை மூடிவிட தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | செயலற்ற கணக்கு தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் படகு சேவைகள் வருமானம் ரூபா 2.51 மில்லியனான போதும் படகு சேவையை நடாத்திச் செல்ல ஆண்டினுள் மேற்கொண்ட உண்மையான கிரயம் ரூபா 7.75 மில்லியனானதில் படகு சேவையை நடாத்திச் சென்றதில் ரூபா 5.24 மில்லியனான நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | படகு சேவையை நடாத்திச் செல்வதால் ரூபா 5.24 மில்லியனான நட்டங்களை 2021 ஆண்டினுள் சந்திக்க நேர்ந்தது, அதனை பூரண வினைத்திறமையுடன் நாட்டில் ஏற்பட்ட பலவிதமான பிரச்சினைகளின் முன் செயற்படுத்த முடியாது போன காரணத்தினால் ஆகும். எதிர்காலத்தில் பூரண வினைத்திறனுடன் நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும். | படகு சேவையை மீண்டும் முறையாக நடாத்திச் செல்ல அல்லது அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட படகுகளை குறை பயன்பாடின்றி பேணிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கம்பனியினால் 2020 ஏப்ரல் 28 திகதி முதல் பாதுகாப்பு சேவையை வழங்கும் பல்லேகெலே சர்வதேச விளையாட்டு அரங்கிற்காக சேவைபெறுனர் நிறுவனத்துடன் எடுத்துமூல உடன்படிக்கைக்கு உட்பட மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பல்லேகெலே சர்வதேச விளையாட்டு அரங்கிற்காக சேவைபெறுனர் நிறுவனத்துடன் எடுத்துமூல உடன்படிக்கைக்கு உட்பட தற்போது குறித்த வரைபு உடன்படிக்கை ஒன்றை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல்களை தீர்க்கும் போது இதுவரை உரிய முறைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சேவைபெறுனர் நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கைக்கு உட்படு அவ் ஒப்பந்த பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சந்தை தேவைப்பாட்டை இனங்காணாது 2018 ஆண்டில் ரூபா 2.34 மில்லியனிற்கு கொள்வனவு செய்த Hand Held Metal Detectors with Chargers 1000 உருப்படிகளில் ரூபா 1.18 மல்லியனான 506 உருப்படிகளும் ரூபா 11.98 மில்லியனிற்கு கொள்வனவு செய்திருந்த Metal Detectors 9 உருப்படிகளிற்கு உரிய 737 உபகரணங்கள் மற்றும் ரூபா 7.64 மில்லியனிற்கு கொள்வனவு செய்திருந்த 32 உருப்படிகளிற்கு உரிய 1113 CCTV உபகரணங்களை விற்பனை செய்து கொள்ள முடியாத அவதானம் மற்றும் உத்தரவாத காலம் முடிவடையும் அவதானம் காரணமாக அவ் உபகரணங்கள் முறையே ரூபா 0.40 மில்லியனிற்கு, 6.79 மில்லியனிற்கு மற்றும் 4.46 மில்லியனிற்கு மதிப்பீட்டு திணைக்களத்தினால் பெறுமானமிடப்பட்டு | 2018 ஆண்டில் Hand Held Metal Detectors 9 உருப்படிகள் மற்றும் CCTV உபகரணங்களை கொள்வனவு செய்ய காரணமானது, நாட்டினுள் பாதுகாப்பு தொடர்பாக ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை மற்றும் அதனோடு சேர்ந்த சந்தையுமாகும். எனினும் தற்போது CCTV உபகரணங்கள் தொடர்பாக நிறுவனம் இலாபம் ஈட்டுவதுடன், Metal Detectors 9 உருப்படிகளிற்காக தற்போது தெளிவான | சந்தை தேவைப்பாட்டை சரியாக மதிப்பிட்டு அபாயத்தை முகாமைத்துவம் செய்து கொண்டு விற்பனை செய்து கொள்ள முடியுமான அளவிலான இருப்பை கொள்வனவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்ததுடன் அதன் பிரகாரம் கூட்டுத் தொகை ரூபா 9.15 மில்லியனான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக அவ் உபகரணங்களை கொள்வனவு செய்வதனூடாக எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாது காணப்பட்டது. | சந்தையொன்று உருவாகியில்லை. அது தொடர்பான விற்பனைக்காக பத்திரிகை விளம்பரம் மேற்கொண்டு பொருத்தமான வழங்குனர்களை கண்டறிந்து கொள்ள நிறுனம் பல முயற்சிகளை எடுத்த போதும் அவ்முயற்சிகள் தோல்வியடைந்தன. | |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் பாதுகாப்பு ஆண் மற்றும் பெண் அலுவலர்களுக்கு மீளாய்வாண்டிற்காக 6500 சீருடைத் தொகுதிகளை ரூபா 8.90 மில்லியனிற்கு 2021 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் வழங்க உடன்பட்டு பெறுகை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதிவரையும் வழங்குனாரால் வழங்கியிருந்த சீருடைத் தொகுதிகள் 1691 மாத்திரமானது. | 2022 ஆண்டு நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமையினாலும் சீருடைத் தொகுதிகளை தைய்ப்பதற்கு தேவையான பொருட்கள் இறக்கமதி செய்யப்படாததனாலும் அவ் உடைத் தொகுதிகளை தைப்பது த தாமதமாகியுள்ளது. தற்போது அவர்களால் அவ் உடைத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன. | ஆண்டிற்காக தேவையான சீருடைகளை வருடம் அரம்பத்தில் பெற்றுக்கொள்ள முடியமானவாறு பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.12 பிரிவின் பிரகாரம் பெறுகைகள்/ தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அங்கத்தவர்களால் பெறுகைகள் நடவடிக்கைகளில் இரகசியத்தை பாதுகாக்கும் வகையில் கூற்றொன்றை வழங்க வேண்டிய போதும் ரூபா 11,079,000 ஆன 09 பெறுகைகள் சந்தர்ப்பங்களில் அவ்வாறான கூற்றொன்றை வழங்கி இருக்கவில்லை. | எமது நிறுவனத்திற்கு கூட்டுத்தாபனத்தினால் பெறுகைகள் சபையொன்றை நியமித்து அனுப்பியுள்ளதுடன் அப் பெறுகைகள் சபை அவ் ஆண்டு முழுவதும் அதிகாரம் பெற்றிருக்கும். இரகசியத்தை பாதுகாக்கும் கூற்றை பெற்றுக் கொள்ள இயலாதிருந்ததாக ஏற்றுக் கொள்வதுடன் அதனை எதிர்காலத்தில் மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் நடைமுறை வழிகாட்டியிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.4.4 பிரிவின் பிரகாரம், பெறுகைகள் நடவடிக்கைகளுக்காக முற்பணம் செலுத்தும் போது, முற்பணத்திற்காக வங்கிக் காப்பொன்றை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் ரூபா 5,140,000 ஆன 04 பெறுகைகள் சந்தர்ப்பங்களில் கம்பனியினால் வங்கிக் காப்பை பெற்றிருக்கவில்லை. அவவாறே மேற்குறிப்பிட்ட திட்டத்தின் 5.3.11 ஆம் பிரிவின் பிரகாரம் மொத்த கிரயத்தின் 1 – 2 சதவீதத்திற்கு இடையிலான தொகைக்கு சமமான விலைமனு காப்பொன்றை ஒவ்வொறு விலைமனுவையும் பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அச் சந்தர்ப்பங்களின் பிரகாரமாவது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாட்டினுள் நிலவிய கொவிட் நிலைமை காரணமாக வழங்குனர்களின் நிதி நிலைமையை கவனத்திற் கொண்டு அப் காப்பு பெறப்படவில்லை. | பெறுகைகள் நடைமுறை வழிகாட்டியிற்கு இணங்க குறித்த காப்பை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.9.1 பிரிவின் பிரகாரம், ரூபா 500,000 யை விஞ்சுகின்ற அனைத்து பண்ட அல்லது சேவை ஒப்பந்தங்களிற்காக குறித்த அங்கீகார படிவத்தின் மூலம் வழங்குனரகள் முறையான உடன்படிக்கை ஒன்றிற்கு உட்பட வேண்டிய போதும் கம்பனியின் ரூபா 530,000 முதல் ரூபா 2,000,000 வரையான 08 ஒப்பந்தங்களிற்காக ஒப்பந்த வழங்களின் போது உடன்படிக்கைகளிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முடிவை ஏற்றுக் கொள்வதுடன் தேவையான சீராக்க செயற்பாடுகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | பெறுகைகள் நடைமுறை வழிகாட்டியிற்கு இணங்க ஒப்பந்ததாரர்களுடன் முறையான உடன்படிக்கைக்கு உட்படல் கட்டாயமாகும். |
| (உ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் குறைந்த பட்சம் மூன்று வருட காலத்திற்கு பெறுகைகள் நடவடிக்கைகள் உள்ளடங்கும் வகையில் பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க வேண்டிய மற்றும் எதிர் வரும் ஆண்டிற்கான பெறுகைகள் நடவடிக்கை பெறுகைகள் கையேட்டின் 4.2.1 பந்தி பிரகாரம் பிரிவான விடயங்களுடன் பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவன பெறுகைகள் செயற்பாடு குறைவடைந்ததன் மீது, இந் நிலைமை ஏற்பட்டதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் அந் நிலைமையை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | வழிகாட்டி பிரகாரம் மூவாண்டு திட்டம் மற்றும் வருடாந்த பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு கம்பனியின் அங்கீகார ஆளணி 91 ஆனதுடன் அத்திகதியில் உள்ளவாறான ஆளணி 87 ஆனதில், அத்திகதியில் கம்பனியின் வெற்றிட எண்ணிக்கை 4 ஆனதுடன் மிகை ஆளணி 4 ஆகவிருந்தது. அதற்கு மேலதிகமாக மிகை ஆளணி 4 ஆனது. | மிகை ஆளணி பின்வருமாறு ஆகும். முகாமையாளர் (நிர்வாகம்) பதிலாக நிர்வாக உத்தியோகத்தர் (விலைமணு கோரல்) ஆக நிறுவன தேவைப்பாட்டின் மீது இணைக்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு முகாமையாளர் - SLLDC இற்காக வழங்கப்படும் பாதுகாப்பு சேவை நடவடிக்கை மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைக்க இணைக்கப்பட்டுள்ளார். விஷேட கருத்திட்ட உத்தியோகத்தர் - SLLDC இன் வெட் கருத்திட்டத்திற்காக ஈடுபடுத்தியுள்ளதுடன் அவரின் சம்பள மீள்நிரப்பலிற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சம்பள முகாமை உத்தியோகத்தர் - இப் பதவிக்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது நியமிக்கப்பட்டுளார். | கம்பனி தேவைப்பாட்டிற்காக ஆளணியை அங்கீகரித்துக் கொள்ள வேண்டியதுடன் இந்த ஆளணியை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆண்டினுள் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்காது மற்றும் நேர்முகப் பரீட்சை இன்றி இணைப்பாளர் பதவி 1 இற்காகவும், 04 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளிற்கும் 02 சாரதி பதவிகளிற்கும் 7 அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் | கடமை நடவடிக்கைகள் அதிகரித்ததன் மீது இவ் ஊழியர் வெற்றிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறாயினும் எதிர்வரும் ஆட்சேர்ப்புக்களின் போது பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து உரிய நடைமுறையின் பிரகாரம் ஊழியர் ஆட்சேர்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கைக் காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு 6 கம்பனி உத்தியோகத்தர்களை விடுவித்திருந்ததுடன் கம்பனியினால் மீளாய்வாண்டில் அவ் உத்தியோகத்தர்களிற்காக ரூபா 3,908,459 தொகையை செலவிட்டிருந்தது. அத் தொகையை 2022 ஜுலை அளவிலும் தாய் கம்பனியிடமிருந்து மீள்நிரப்பிக்கொண்டு இருக்கவில்லை. | 2021 ஆண்டில் SLLDC இற்கு முழுநேரத்திற்காக ஈடுபடுத்திய உத்தியோகத்தர்களிற்கு செலுத்திய சம்பளத்தை மீள்நிரப்ப தேவையான நிதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | வேறு நிறுவனங்களிற்கு விடுவிப்பது பிரச்சினைக்கு உரியதாவதுடன் கம்பனி அவ் உத்தியோகத்தர்களிற்காக செலவிட்ட தொகையை மீள்நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் பாதுகாப்பு சேவைக்காக 1417 உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்திருந்ததுடன் கடமையில் ஈடுபடுத்தியிருந்த 1520 உத்தியோகத்தர்கள் கடமையிலிருந்து விலகி அல்லது அறிவிக்காது விட்டுச் சென்றிருந்தனர். இவ்வாறு உத்தியோகத்தர்கள் கடமையை விட்டு செல்வது கம்பனியின் பாதுகாப்பு சேவை வருமானம் குறைவடைய காரணமாக இருந்தது. அவ்வாறு ஊழியர்கள் தொடர்ந்து கடமையை விட்டுச் செல்லும் காரணத்தை மதிப்பிட்டு தேவையான வழிமுறைகளை எடுக்க 2022 ஆகஸ்ட் வரை நடவடிககை எடுத்திருக்கவில்லை. | பாதுகாப்பு கடமைகளிற்காக தரம் 8 சித்தியடைந்த ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுகின்றனர். இவ் ஊழியர்கள் அடிக்கடி அறிக்காது கடமைக்கு அறிக்கையிடல், கடமையிலிருந்து கேட்டு விலகுதலும் இடம்பெறுகின்றது. | கம்பனியின் வருமான மூலங்களை நிலையாக பேணிக் கொள்ள தேவையான வழிமுறைகளை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் 01/2021 மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் குறிப்பிடப்படுதன் பிரகாரம் கம்பனியினால் மீளாய்வாண்டிற்கு உரியதாக இறுதி நிதிக்கூற்றை 2022 பெப்ரவரி 28 திகதிக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட வேண்டிய போதும் 03 மாதங்கள் தாமதித்து அதாவது 2022 மே 27 திகதி நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆண்டில் நிதி அறிக்கையை சமர்பிக்கும் போது ஏற்பட்ட தாமதத்தை ஏற்றுக் கொள்வதுடன், 2022 ஆண்டில் அந் நிலைமையை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்பிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதென. |

**4.2 வருமடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் 6.6 பந்தி பிரகாரம் கம்பனியினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் இக் கம்பனி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதலிலிருந்து வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் கம்பனியின் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனைகளுக் இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**4.3 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலக்கம் 01/2017 மற்றும் 2014 பெப்ரவரி 11 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 5(2) பந்தி மற்றும் இலக்கம 12 மற்றும் 2003 ஜுன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பிரிவு பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் நிதியாண்டில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் வணிக செயற்பாடுகள் உள்ளிட்ட செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதும் அச் செயல் நடவடிக்கை திட்டத்தை நிதியாண்டு ஆரம்பிக்க 15 நாட்களிற்கு முன்னர் தயாரித்து பணிப்பாளர் சபை அங்கீகரித்த பின்னர் வரிசை அமைச்சின் பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களத்திற்கு, பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு தயாரித்து சமர்பித்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தை 2022 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. | வருடாந்தம் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரித்து அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.4 பாதீட்டு கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட தேறிய இலாபத்தை உள்ளவாறான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது 31.2 சதவீத முரன்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாடு கருவியாக பயன்படுத்தப்படாதமை அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட தேறிய இலாபம் உள்ளவாறான இலபத்துடன் ஒப்பிடுகையில் 31.2 சதவீத முரன்பாடுகளிற்காக செயற்பட்ட போதும் நிறவனத்தின் விளைவு எதிர்பார்பை அடைந்து கொண்டனவா இல்லையா என பகுப்பாய்வின் போது பாதீடு மிக முக்கிய கடமை பொறுப்பொன்றை மேற்கொள்கின்றது. | பாதீட்டை முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்த வேண்டும். |